# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 1998 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க கொழும்பு பௌத்த பிரம்மஞான சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டம்

---

*(1998, மே மாதம் 21 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது

---

1998, மே மாதம் 22 ஆந் தேதிய **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

**விலை : ரூபா 7.75** **தபாற் செலவு : ரூபா 4.60**

## 1998 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க கொழும்பு பௌத்த பிரம்மஞான சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டம்

[1998 ஆம் ஆண்டு மே மாதம் 21 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]

ச. வ.—ஒ. 4/94

## கொழும்பு பௌத்த பிரம்மஞான சங்கத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

1873 ஓகத்து மாதம் இடம்பெற்ற "பாணந்துறை விவாதம்" மூலம் பரப்பப்பட்ட தர்மபோதனைகளினால் மனம் கவரப்பட்ட அமெரிக்க பிரம்மஞானி ஒருவராகிய கர்ணல் ஹென்றி ஸ்ரீல் ஒல்கொட் என்பவரும், ரஷ்ய எழுத்தாளரும் பிரம்மஞானியுமான மேடம் ஹெலேனா பி. பிளாவட்ஸ்கி என்பவரும், 1880 மே மாதம் 17 ஆம் திகதியன்று இலங்கைக்கு வந்து திசரண பஞ்சசீலத்தைக் கடைப்பிடிப்பதன்மூலம் பௌத்த மதத்தைத் தழுவினர் ஆதலாலும் : முன்னுரை.

அத்துடன், சொல்லப்பட்ட பிரம்மஞானிகள், சுயகௌரவம் பற்றி மக்கள் விளக்கம் பெறவேண்டிய அவசியத்தை உணர்ந்து, வணக்கத்திற்குரிய ஹிக்கடுவ ஸ்ரீ சுமங்கல, வணக்கத்திற்குரிய மீகெட்டுவான குணானந்த, அநகாரிக தர்மபால ஆகியோருடனும் ஏனைய பௌத்த தலைவர்களுடனும் கூட்டாக இணைந்து, கல்வியையும், பாரம்பரிய கலாசாரத்தையும் தேசிய மரபுகளையும் ஊக்கி வளர்த்து, புத்தசாசனத்தைப் பாதுகாக்கும் நோக்கத்துக்காக, கொழும்பு பௌத்த பிரம்மஞான சங்கத்தைத் தாபித்தனர் என்பதுடன் இச்சங்கம் 420 பொதுப் பாடசாலைகளை முகாமைசெய்து வந்தது ஆதலாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :

1. இச்சட்டம் 1998 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, கொழும்பு பௌத்த பிரம்மஞான சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப்பெயர்.

கொழும்பு பௌத்த பிரம்மஞான சங்கத்தைக் கூட்டிணைத்தல்.

2. இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்தும் அதன்பின்னரும், (இதனகத்துப்பின்னர் "சங்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) கொழும்பு பௌத்த பிரம்மஞான சங்கத்தின் தற்போதைய உறுப்பினராகவுள்ள அல்லது இத்தால் அமைக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களாக இதன்பின்னர் சேர்த்துக் கொள்ளப்படும் அத்தகையோரான அத்தனையாட்களும், (இதனகத்துப்பின்னர் "கூட்டுத்தாபனம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) "கொழும்பு பௌத்த பிரம்மஞான சங்கம்" என்னும் பெயர் மகுடத்தின்கீழ், இடையறாவழியுரிமைகொண்ட கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாதல் வேண்டும். அத்துடன் அப்பெயர் கொண்டு எல்லா நீதிமன்றங்களிலும் அது வழக்குத் தொடுக்கலாம் என்பதுடன், அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம். அத்துடன் பொது இலச்சினை யொன்றை வைத்திருக்கவும், பயன்படுத்தவும், விரும்பியாங்கு அதனை மாற்றவும் அது முழுத்தத்துவமும், அதிகாரமும் கொண்டிருத்தல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள் கள்.

3. கூட்டுத்தாபனம் அமைக்கப்படுவதற்கான பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாயிருத்தல் வேண்டும் என இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது :—

(அ) புத்தசாசனத்தை ஊக்கி வளர்த்தலும், அபிவிருத்தி செய்தலும், அத்துடன் தம்ம பாடசாலைகளையும் அபிதம்ம மற்றும் பாளி போதனை நிலையங்களை யும் தாபித்துப் பேணுவதன்மூலமும், விரிவுரை நிகழ்ச் சித்திட்டங்களையும், மாநாடுகளையும், விவாதங் களையும், செயலமர்வுகளையும் ஒழுங்கமைப்பதன் மூலமும் பௌத்த கோட்பாட்டைப் பரப்புதலும் ;

(ஆ) சிறந்த தர்ம போதனைகளில் ஈடுபட்டு முன்னேறும் வகையில் பிக்குகளுக்கான பயிற்சிக் கல்லூரிகளைத் தாபித்தலும், பிக்குமார்களுக்குப் பொருத்தமான ஆட்கள் சேர்வதை ஊக்குவித்தலும் ;

(இ) பௌத்த கலாச்சாரம், இலக்கியம், கலைகள் ஆகிய வற்றின் முன்னேற்றத்தை மேம்படுத்தலும் ;

(ஈ) பௌத்தர்களை ஒழுக்க, கலாச்சார, சமூக ரீதியாக அபிவிருத்திசெய்து, அவர்களது உரிமைகளைப் பாதுகாத்தலும் ;

(உ) அனாதை இல்லங்களையும், முதியோர் மனைகளையும் தாபித்துப் பேணிவருதலும், வெள்ளம், சூறாவளி, தொற்றுநோய் மற்றும் இடர்களினால் பாதிக்கப்பட்ட ஆட்களுக்கு உதவி வழங்குதலும் ;

(ஊ) இலங்கையிலும், வெளிநாட்டிலும் யாத்திரிகர்களுக்கு தங்குவசதிகளை ஏற்பாடு செய்தலும், ஏனைய சமூகசேவைகளையும் நலன்புரிச் செயற்பாடுகளையும் ஒழுங்கமைத்தலும் ;

(எ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை முன்னெடுத்துச் செல்லவும் அதற்கிணங்கி முற்கல்விப் பாடசாலைகளையும் ஏனைய கல்வி நிறுவனங்களையும், வாழ்க்கைத் தொழிற்பயிற்சி நிலையங்களையும் தாபித்துப் பேணிவருதலும் அத்துடன் கல்விக்கும் பிள்ளைகளின் அபிவிருத்திக்குமாக நிதியுதவியையும், புலமைப்பரிசில்களையும், வசதிகளையும் வழங்குதலும் ;

(ஏ) நூலகங்களைத் தாபித்தலும், கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களுடன் தொடர்புபட்ட புத்தகங்களையும் பருவகால சஞ்சிகைகளையும் அச்சிடுதலும், வெளியிடுதலும், விற்பனை செய்தலும் ;

(ஐ) இனம், மதம், ஆண், பெண், குலம் அல்லது நிறம் போன்ற பாகுபாடின்றி சர்வதேச சகோதரத்துவத்தை வலுப்படுத்துவதற்கான நடுநிலையமொன்றைத் தாபித்தல் ;

(ஒ) ஒப்பீடான மதங்களையும் தத்துவத்தையும் அறிவியலையும் பற்றிய கற்கையை ஊக்குவித்தல் ;

(ஓ) சமாதானத்தையும் அனைத்துலக சகோதரத்துவத்தையும் மேம்படுத்தல் ; அத்துடன்

(ஔ) மேற்கூறப்பட்ட குறிக்கோள்கள் எல்லாவற்றையும் அல்லது அவற்றுள் எதனையும் எய்துவதற்கு உசிதமான அல்லது இடைநேர்விளைவான அத்தகைய வேறு செயல்களையும் விடயங்களையும் செய்தல் ;

கூட்டுத்தாபனத்தின் பொதுவான தத்துவங்கள்.

4. இச்சட்டத்தினதும் வேறேதேனும் எழுத்திலான சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கமைய கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை அல்லது அவற்றுள் எதனையேனும் மேம்படுத்துவதற்கு அல்லது முன்னெடுத்துச் செல்வதற்கு அவசியமானவாறான அல்லது விரும்பத்தக்கவாறான எத்தன்மையனவுமான எல்லாச் செயல்களையும் கருமங்களையும் காரியங்களையும் செய்யவும், புரியவும், நிறைவேற்றவும் கூட்டுத்தாபனம் தத்துவமுடையதாதல் வேண்டும்; இத்தத்துவத்துள் வங்கிக் கணக்குகளைத் தொடங்குதல், தொழிற்படுத்துதல், முடிவுறுத்தல் என்பவற்றிக்கும் பிணைப் பொறுப்புடன் அல்லது பிணைப்பொறுப்பில்லாமல் பணம் கடன்பெறுவதற்கும் அல்லது திரட்டுவதற்கும் மானியக் கொடைகளையும் நன்கொடைகளையும் பெறுவதற்கும் அல்லது சேகரிப்பதற்கும் அதன் நிதிகளை முதலீடு செய்வதற்கும் கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்குத் தேவையான அலுவலர்களையும் சேவையாளர்களையும் வேலையிலீடுபடுத்துதல், வேலைக்கமர்த்தல், வேலையிலிருந்து நீக்கல் என்பவற்றுக்குமான தத்துவமும் அடங்கும்.

கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்.

5. (1) கூட்டுத்தாபனத்தின் அலுவல்கள் அப்போதைக்கு வலுவிலுள்ள கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கு அமைவாக பதவி தாங்குநர்களையும் அத்தகைய விதிகளில் ஏற்பாடு செய்யக் கூடியவாறு அதற்கிணங்க தேர்ந்தெடுக்கப்படக் கூடியவாறான அத்தகைய வேறு ஆட்களையும் கொண்ட நிறைவேற்றுக்குழுவொன்றினால் நிருவகிக்கப்படுதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் முதலாவது நிறைவேற்றுக்குழு இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு முற்போந்த நாளன்று பதவி வகிக்கின்றவர்களும் இதற்கான அட்டவணையில் பெயர் குறித்துரைக்கப்பட்டவர்களுமான சங்கத்தின் நிறைவேற்றுக் குழு உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் விதிகள்.

6. (1) ஏதேனும் பொதுக்கூட்டத்திலும், சமுகமளித்து வாக்களிக்கும் உறுப்பினர்களுள் மூன்றில் இரண்டுக்குக் குறையாதோரின் வாக்குப் பெரும்பான்மை கொண்டும், பின்வரும் எல்லாக் கருமங்களுக்காகவும் அல்லது அவற்றுள் எதற்காகவும் இச்சட்டத்தினதும், வேறு எழுத்திலான சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் ஒவ்வாதனவாகவிராத விதிகளைக் காலத்துக்குக்காலம் ஆக்குதல் கூட்டுத்தாபனத்திற்குச் சட்ட முறையானதாதல் வேண்டும் :—

(அ) உறுப்பாண்மையை வகைப்படுத்தல், உறுப்பினர்களைச் சேர்த்துக் கொள்ளுதலும், விலக்குதலும் அல்லது வெளியேற்றலும் ;

(ஆ) பதவிதாங்குநர்களைத் தேர்ந்தெடுத்தல், அவர்கள் பதவி விலகல் அல்லது பதவியை வறிதாக்கல் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுதல், அவர்களது தத்துவங்களும், கடமைகளும் ;

(இ) நிறைவேற்றுக் குழுவின் உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல், அக்குழுவின் தத்துவங்களும் கடமைகளும், நடாத்திச் செல்லுதலும் ;

(ஈ) கூட்டுத்தாபனத்தின் பல்வேறு அலுவலகர்கள், நம்பிக்கைப் பொறுப்பாளர்கள், முகவர்கள், சேவையாளர்கள் என்போரின் தத்துவங்களும், நடத்தையும், கடமைகளும், பணிகளும் ;

(உ) கூட்டுத்தாபனத்தின் நிறைவேற்றுக் குழுக் கூட்டங்களைக் கூட்டுவதற்கும் நடாத்துவதிலும் பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கை முறையும், நிறைவேற்றுக் குழுவின் கூட்டங்கள், அத்தகைய கூட்டங்களுக்கான நேரமும், இடங்களும், அறிவித்தல்களும், நிகழ்ச்சிக் குறிப்பும், அவற்றிற்கான கூட்ட நடப்பெண்ணும், அத்தகைய கூட்டங்களில் அலுவல்களைக் கையாளுதலும், ஒழுக்கத்தைப் பேணுதலும் ;

(ஊ) கூட்டுத்தாபன ஆதனத்தின் நிருவாகமும் முகாமையும் அதன் நிதிகளின் கட்டுக்காப்பு, அதன் கணக்குகளைப் பேணுதலும், கணக்காய்வு செய்தலும் ; அத்துடன்

(எ) பொதுவில் கூட்டுத்தாபன அலுவல்களை முகாமை செய்தலும், அதன் குறிக்கோள்களை எய்தப் பெறுதலும்.

(2) கூட்டுத்தாபனத்தினால் ஆக்கப்படும் விதி எதுவும், (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்படும் விதியொன்று என்றாற்போன்று அதேபோன்ற கூட்டத்திலும், அதேபோன்ற முறையிலும் திருத்தப்படலாம், மாற்றப்படலாம், ஒழிக்கப்படலாம் அல்லது அதற்கு எதுவும் சேர்க்கப்படலாம்.

(3) இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முற்போந்த நாளன்று உளதாகிய சங்கத்தின் யாப்பு, அது இச்சட்டத்தினது அல்லது வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தினது ஏற்பாடுகளுக்கு ஒவ்வாததாக இராத அளவுக்கு (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்டிருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன் எல்லா நோக்கங்களுக்கும் கூட்டுத்தாபனத்தின் விதிகளாக இருத்தலும் வேண்டும்.

(4) கூட்டுத்தாபனத்தின் ஒவ்வோர் உறுப்பினரும் கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கு அமைந்தோராதல் வேண்டும்.

*சங்கத்தினால் செலுத்தப்படற்பாலனவும் சங்கத்திற்குச் செலுத்தப்படற்பாலனவுமான கடன்கள்.*

7. இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முற்போந்த நாளன்று உளதாகிய சங்கத்தின் அனைத்துக் கடன்களும், பொறுப்புக்களும் இத்தால் உருவாக்கப்பட்ட கூட்டுத்தாபனத்தினால் செலுத்தப்படுதல் வேண்டும் என்பதுடன், அந்நாளன்று சங்கத்திற்குப் போமதியான தனிசுகளும் செலுத்தப்படற்பாலனவான ஒப்பப்பணங்கள், உதவுதொகைகள் யாவும், இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகக் கூட்டுத்தாபனத்திற்குச் செலுத்தப்படுதலும் வேண்டும்.

*கூட்டுத்தாபனம் அசைவுள்ள, அசைவற்ற ஆதனத்தை வைத்திருக்கலாம்.*

8. கூட்டுத்தாபனம், ஏதேனும் கொள்வனவு, அளிப்பு, நன்கொடை, மரணசாதனக் கையுதிர்ப்பு என்ற வகையாக அல்லது வேறு வகையாக அதற்கு உரித்தாக்கப்படக்கூடிய அசைவுள்ள, அசைவற்ற ஏதேனும் ஆதனத்தைக் கொள்ளவும், வைத்திருக்கவும் சட்டப்படி இயலுமானதாதலும், ஆற்றல் உடையதாதலும் வேண்டும் என்பதுடன், அத்தகைய ஆதனம் யாவும், விற்பனை செய்வதற்கான, ஈடுவைப்பதற்கான, குத்தகைக்குக் கொடுப்பதற்கான, கொடுத்து மாற்றுவதற்கான அல்லது வேறுவகையில் கையுதிர்ப்பதற்கான முழுத்தத்துவத்துடன், கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்காகவும் அப்போதைக்கு வலுவிலுள்ள கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமையவும் கூட்டுத்தாபனத்தினால் வைத்திருக்கப்படுதல் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் இலச்சினை.*

9. கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது, தலைவரினால் பெயர் குறிப்பிடப்படும் இணைச் செயலாளரின் கட்டுக்காப்பில் இருத்தல் வேண்டும் என்பதுடன், அத்தகைய இணைச் செயலாளர் அத்துடன் ஒன்றில் தலைவர் அல்லது பொருளாளர் ஆகியோரின் முன்னிலையிலன்றி எத்தகையதுமான எச்சாதனத்திலும் இடப்படுதலாகாது என்பதுடன் அவர்கள் தாம் சமுகமளித்திருந்தமைக்கு அடையாளமாக அச்சாதனத்தில் தமது பெயர்களை எழுதிக் கையொப்பமிடலும் வேண்டும். அத்தகைய ஒப்பமிடுதல் எவரேனும் ஆள் சாட்சியாகக் கையொப்பமிடுவதினின்றும் தனிவேறானதாதல் வேண்டும்.

**10**. இச்சட்டத்தில் அடங்கியுள்ள எதுவும், குடியரசினது உரிமைகளையேனும், ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவினது உரிமைகளையேனும், இச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டவர்களும், அவர்கள் மூலம், அவர்களிலிருந்து அல்லது அவர்களின்கீழ் உரிமைகோருபவர்களும் தவிர்ந்த வேறு எவரேனும் ஆட்களினது உரிமைகளையேனும் பாதித்தல் அல்லது பங்கப்படுத்தல் ஆகாது.

குடியரசினதும் மறுபேரினதும் உரிமைகளைப் பேணுதல்.

**11**. இச்சட்டத்தில் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையில் ஏதேனும் ஒவ்வாமை காணப்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387: (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல.32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ்ரோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.